சுருக்கம்

விரிவாக்கம் – சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள சில உள்ளாட்சி அமைப்புகளை சென்னை மாநகராட்சி எல்லைக்குள் சேர்த்தல் மற்றும் எல்லையை விரிவாக்குதல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

அரசாணை (நிலை) எண். 256 நாள்: 26.12.2009.

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை)எண்.30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.2.2007.
2. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவரின் நே.மு.கடிதம் எண்.சி1/3893/07 நாள் 30.5.2008.
3. அரசாணை (நிலை)எண்.182, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.9.2008.
4. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் துணைத் தலைவரின் நே.மு.கடிதம் எண்.சி1/3893/07 நாள் 19.8.2009.

---

**ஆணை:–**

சென்னை மாநகராட்சி தற்போது 174 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. சென்னை மாநகரின் தற்போதைய எல்லை 1978–ஆம் ஆண்டு, அதாவது, 30 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டது. சென்னைப் பெருநகர்ப் பகுதி (Chennai Metropolitan Area) வேகமாக வளர்ந்து வருகிறது. வளர்ந்து வரும் தேவைகளை கருத்தில் கொண்டு தரமான சாலைகள், குடிநீர் வழங்குதல், தெரு விளக்குகள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை (Solid Waste Management) ஆகிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியுள்ளன. சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகள் வழங்கிவரும் சேவைகளின் நிலை பெருமளவில் வேறுபடுகின்றன. மேலும் அவை போதுமானதாக இல்லை. மாநகருக்கு அருகாமை மற்றும் தொடர்ச்சியாக அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து தற்போதைய சென்னை மாநகராட்சிப் பகுதியினை விரிவாக்குவதற்கு போதுமான வாய்ப்புகளும், அவசியமும் உள்ளன என கருதப்படுகிறது.

2. மேலும் மாநகராட்சிகள் அமைப்பது தொடர்பான பல்வேறு அம்சங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து தக்க பரிந்துரைகளை அரசுக்கு அளிப்பதற்கென, முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவரை தலைவராகவும், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலாளரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழுவொன்றை அமைத்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய மாநகராட்சிகளின் எல்லைகள் மற்றும் அவற்றின் தலைமை இடங்கள் குறித்தும் பரிந்துரைகளை செய்யுமாறு குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. சென்னையைச் சுற்றி புதிய மாநகராட்சிகள் அமைப்பது குறித்து விரிவான அறிக்கை, இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக அரசிடம் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து புதிய மாநகராட்சிகள் அமைப்பது குறித்து, தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் கலந்தாலோசிக்கவும், இவ்வாலோசனைகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மேற்கொள்ளவும், மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தின் வாயிலாக குழு தனது ஜூலை 2009 அறிக்கையை அரசுக்கு அளித்தது. இவ்வறிக்கையில் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட ஆணைகளின் அடிப்படையில் தாம்பரம், அம்பத்தூர் மற்றும் திருவொற்றியூரில் கலந்தாலோசனைக் கூட்டங்கள் முறையே 15.11.2008, 22.11.2008 மற்றும் 13.12.2008 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டதாகவும், இக்கூட்டங்களில் பொது மக்கள் தவிர, குடியிருப்புச் சங்கங்கள், தன்னார்வ நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகள், தொடர்புடைய பகுதிகளின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர்கள், ஆணையர்கள், செயல் அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்கள் ஆகியோர் பங்கு பெற்று தத்தமது ஆலோசனைகள் மற்றும் மாற்றுக் கருத்துக்களை அளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மேலும், 6.2.2009 அன்று, சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைமைப் பொறியாளர், இந்திய தொழில் முனைவோர் கூட்டமைப்பு (Confederation of Indian Industry - CII), இந்திய கட்டுமானோர் சங்கத்தின் தென்னிந்திய பிரிவின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட "தொடர்புடைய தரப்பினரின்" (Stake-holders) கூட்டமும் நடத்தப்பெற்று அவர்களின் ஆலோசனைகளும், மாற்றுக் கருத்துக்களும் பெறப்பட்டதாகவும், மேம்படுத்தப்பட்ட நகர்ப்புர வசதிகளையும் சேவைகளையும் அளிப்பதற்கென புதிய மாநகராட்சிகளை அமைப்பது குறித்தான அரசின் முயற்சிகளை பொதுமக்கள் வரவேற்றுள்ளதாகவும் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. குழு, பல்வேறு மாற்று செயற்குறிப்புகளின் (Alternatives) அனைத்து அம்சங்களையும் மற்றும் தொடர்புடைய அனைத்து தரப்பினரின் ஆலோசனைகள் மற்றும் மாற்றுக் கருத்துக்களையும் விவாதித்து கீழ்க்காணும் இரண்டு செயற்குறிப்புகளை (Alternatives) அரசின் இறுதி முடிவிற்கென பரிந்துரை செய்தது.

| | | |
|---|---|---|
| (i) | **செயற்குறிப்பு A** | சென்னைப் பெருநகர் பகுதியின் (Chennai Metropolitan Area) 800 சதுர கிலோமீட்டர் பகுதியினை உள்ளடக்கும் வகையில் சென்னை மாநகராட்சிப் பகுதியின் பரப்பளவினை விரிவாக்குதல். இதனை "சென்னைப் பெருநகர மாநகராட்சி" என்றழைத்தல் |
| (ii) | **செயற்குறிப்பு B** | திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர் மற்றும் ஆலந்தூர் நகராட்சிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கி சென்னை மாநகராட்சிப் பகுதியின் பரப்பளவினை 426 சதுர கிலோமீட்டராக விரிவாக்கம் செய்தல்; ஆவடி (168 ச.கி.மீ) மற்றும் தாம்பரம் (218 ச.கி.மீ) ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு இரண்டு புதிய மாநகராட்சிகளை உருவாக்குதல். |

7. மேற்படி செயற்குறிப்புகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவான விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெரியதொரு மாநகராட்சியை அமைப்பதால் கீழ்க்காணும் நன்மைகள் அமையுமென கருதப்படுகிறது.

(i) கட்டமைப்பு வசதிகளின் மேம்பாட்டிற்கான ஒட்டுமொத்த திட்டமிடுதலை மேற்கொள்ளலாம். நிதியாதாரங்கள் உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் சரியான அளவில் பயன்படுத்தும் வகையில் வளர்ச்சியை திட்டமிடலாம்.

(ii) சென்னை மாநகராட்சியுடன் இணைக்க கருதப்பட்டுள்ள பகுதிகள் **"சென்னை"** என்ற அடையாளத்தை பெறும். இந்த அடையாளம், பொருளாதார வளர்ச்சி மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கியத்துவம் பெறும்.

(iii) சென்னை மாநகராட்சி எல்லையை ஒட்டி அமைந்துள்ள பகுதிகளில் நகர்ப்புரமயமாக்கலின் வளர்ச்சி வீதம் அதிகமாக உள்ளது. இப்பகுதிகள் அதிகமான முதலீடுகளை ஈர்க்கும் வகையில் உள்ளன. இந்த முதலீடுகளை வழிமுறைப் படுத்துவதும், நெறிப்படுத்துவதும் பெரியதொரு உள்ளாட்சி அமைப்பிற்கு எளிதானதாகும்.

(iv) இந்தியாவில், நகரங்கள் அவற்றின் மக்கள் தொகையின் அடிப்படையில் தர வரிசைப்படுத்தப் படுகின்றன. இத்தரப்படுத்துதல் நிதி முதலீடுகளை ஈர்ப்பதிலும் மேலும் நிதியுதவிகளை பெறுவதிலும் முக்கியமாக கருதப்படுகிறது.

8. இதனை தொடர்ந்து உருவான கருத்துக்களின் அடிப்படையில், அரசு, கவனமான பரிசீலனைக்குப் பின்னர், கீழ்க்காணும் கொள்கை முடிவுகளை மேற்கொண்டு, அவ்வாறே ஆணையிடுகிறது.

(i) சென்னைப் பெருநகர்ப் பகுதியில் மேலும் மாநகராட்சிகளை அமைப்பது குறித்து ஆராய அமைக்கப்பட்ட குழுவின் ஜூலை 2009 அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள செயற்குறிப்பு B-க்கு ஒப்புதல் அளிக்கப்படலாம்; மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய மாநகராட்சிகள், அதாவது, சென்னை–ஆவடி மற்றும் சென்னை–தாம்பரம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், முடிவு பின்னர் மேற்கொள்ளப்படும்.

(ii) இதனடிப்படையில் கீழ்க்காணும் உள்ளாட்சி அமைப்புகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து சென்னை மாநகராட்சி விரிவாக்கப்படலாம்.

(அ) நகராட்சிகள்

| வ. எண் | பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | கத்திவாக்கம் | திருவள்ளூர் |
| 2. | திருவொற்றியூர் | திருவள்ளூர் |
| 3. | மணலி | திருவள்ளூர் |
| 4. | மாதவரம் | திருவள்ளூர் |
| 5. | அம்பத்தூர் | திருவள்ளூர் |
| 6. | மதுரவாயல் | திருவள்ளூர் |
| 7. | வளசரவாக்கம் | திருவள்ளூர் |
| 8. | ஆலந்தூர் | காஞ்சிபுரம் |
| 9. | உள்ளகரம்–புழுதிவாக்கம் | காஞ்சிபுரம் |

(ஆ) பேரூராட்சிகள்

| வ. எண் | பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | சின்ன சேக்காடு | திருவள்ளூர் |
| 2 | புழல் | திருவள்ளூர் |
| 3 | போரூர் | திருவள்ளூர் |
| 4 | நந்தம்பாக்கம் | காஞ்சிபுரம் |
| 5 | மீனம்பாக்கம் | காஞ்சிபுரம் |
| 6 | பெருங்குடி | காஞ்சிபுரம் |
| 7 | பள்ளிக்கரணை | காஞ்சிபுரம் |
| 8 | சோழிங்கநல்லூர் | காஞ்சிபுரம் |

(இ) ஊராட்சிகள்

| வ. எண் | ஊராட்சி | ஊராட்சி ஒன்றியம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | இடையஞ்சாவடி | மீஞ்சூர் | திருவள்ளூர் |
| 2. | சடையங்குப்பம் | புழல் | திருவள்ளூர் |
| 3. | கடப்பாக்கம் | புழல் | திருவள்ளூர் |
| 4. | தீயம்பாக்கம் | புழல் | திருவள்ளூர் |
| 5. | மாத்தூர் | புழல் | திருவள்ளூர் |
| 6. | வடப்பெரும்பாக்கம் | புழல் | திருவள்ளூர் |
| 7. | சூரப்பட்டு | புழல் | திருவள்ளூர் |
| 8. | கதிர்வேடு | புழல் | திருவள்ளூர் |
| 9. | புத்தகரம் | புழல் | திருவள்ளூர் |
| 10. | நொளம்பூர் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |
| 11. | காரம்பாக்கம் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |
| 12. | நெற்குன்றம் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |
| 13. | ராமாபுரம் | வில்லிவாக்கம் | திருவள்ளூர் |
| 14. | முகலிவாக்கம் | குன்றத்தூர் | காஞ்சிபுரம் |
| 15. | மணப்பாக்கம் | குன்றத்தூர் | காஞ்சிபுரம் |
| 16. | கொட்டிவாக்கம் | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 17. | பாலவாக்கம் | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 18. | நீலாங்கரை | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 19. | ஈஞ்சம்பாக்கம் | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 20. | காரப்பாக்கம் | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 21. | ஒக்கியம் துரைப்பாக்கம் | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 22. | மடிப்பாக்கம் | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 23. | ஜல்லடம்பேட்டை | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 24. | செம்மஞ்சேரி | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |
| 25. | உத்தண்டி | புனித தோமையார் மலை | காஞ்சிபுரம் |

(iii) தற்போதுள்ள உள்ளாட்சி அமைப்புகள் பாதிக்கப்படாத வண்ணம், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தற்போதைய உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக்காலம் 2011 – ஆம் ஆண்டு முடிவடைந்தவுடன், புதிய மாநகராட்சி அமைக்கப்படலாம்.

(iv) உத்தேசிக்கப்பட்டுள்ள மாநகராட்சியின் புதிய வார்டுகள் மக்கள் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்படலாம். சென்னை மாநகராட்சியின் தற்போதைய வார்டுகளும் மக்கள் தொகையின் அடிப்படையில் மாற்றி அமைக்கப்படலாம்.

9. மேலும், அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில் மேற்கொள்ளப்பட்ட நடைமுறை போன்று, சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல், தற்போதைய வார்டுகளை மாற்றியமைத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து பணிகளையும் சென்னை மாநகராட்சி ஆணையர் மேற்கொள்ளவும், இப்பணிகளை மேற்கொள்வதற்கென, தேவையெனில் சிறப்பு அதிகாரியை (Officer on Special Duty) பணியமர்த்தி கொள்வதற்கு (To Designate) சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது. மேலும், சிறப்பு அதிகாரியின் அறிக்கை ஆறு மாத காலத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் அரசு ஆணையிடுகிறது.

10. அரசு, மேற்சொன்ன கொள்கை முடிவினை செயல்படுத்துவதற்கு தொடர்புடைய சட்ட வகைமுறைகளையும், சட்ட நடைமுறைகளையும் பின்பற்றி தேவையான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
துணைத் தலைவர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னை – 600 008.
வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 600 003.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 600 108.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், சென்னை –2.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சைதாப்பேட்டை, சென்னை – 15.
மாவட்ட ஆட்சி தலைவர், காஞ்சிபுரம் / திருவள்ளூர்.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள் (நகராட்சி நிர்வாக இயக்குநர், வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள் (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வழியாக).

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
அனைத்து துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அனைத்து பிரிவுகள்.

**// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //**

24.12.09

**பிரிவு அலுவலர்**